DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.83/2024 | Deposition of Witness for : PW3 |
| Name : இசைகலா | Father/Husband Name : கண்ணன் |
| Age : 31 | Village : மானாட்டுர் |
| Taluk : ஏரல் | Calling : Lab Technician |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07 April 2026.
Accused absent. Petition U/s.317 Cr.P.C/355 BNSS filed and allowed.

<u>முதல் விசாரணை</u> :-

1. நான் தற்போது மானாட்டுரில் குடியிருந்து Lab Technician ஆக வேலை பார்த்து வருகிறேன். எதிரியை தெரியும். அ.சா.1 ஐ தெரியும், எனது கணவர் ஆவார். கடந்த 29.10.2023 அன்று மாலை 5.30 மணியளவில் கழிவு நீரை எதிரி எங்கள் வீட்டின் முன்பு திறந்துவிட்டார், அதுசம்பந்தமாக என்னுடைய கணவரான அ.சா.1 எதிரியிடம் சென்று ஏன் கழிவு நீரை இவ்வாறு விடுகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு எதிரி அ.சா.1 ஐ மாடு விரட்டும் கட்டையால் அ.சா.1 ன் தலையில் ஓங்கி அடித்தார். அதனால் அ.சா.1 க்கு காயம் ஏற்பட்டு இரத்தம் வந்தது. இந்த சம்பவத்தை பார்த்து நான் வெளியில் ஓடிவந்து என்ன நடந்தது என்று கேட்டேன், அதற்கு எதிரி பரச்சி, பரச்சி என்று என்னுடைய சாதியை வைத்து ஏசினார்கள், மேலும் புண்டா மவளே என்று ஆபாசமாக பேசி என்னை முதுகில் அடித்தார். நான் கீழே விழுந்துவிட்டேன். அதன்பின்பு அ.சா.2 சம்பவ இடத்திற்கு வந்து காயம்பட்ட அ.சா.1 ஐ ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனைக்கு நானும் அ.சா.2 ம் அழைத்துச் சென்றோம். அங்கே போதிய சிகிச்சை வசதிகள் இல்லாததால் அ.சா.1 ஐ திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். அப்போது போலீசார் அ.சா.1 யிடம் புகார் வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலத்தில் என்னுடன் என்னுடைய மாமா முறை ப.சா.4 முத்துமுருகன் என்பவரும் கையொப்பம் செய்தார். இது சம்பந்தமாக அ.சா.1 காவல்நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

2. அ.சா.1 என்னுடைய கணவர் என்றால் சரிதான். எனக்கு வழக்கு சம்பவம் எதுவும் நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையில் வழக்கு சம்பவம் எனக்கு நேரடியாக தெரியும் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் திருநெல்வேலியில் பிரபலமான மருத்துவமனையில் Lab Technician ஆக பணியாற்றி வருகிறேன் என்றால் சரிதான். எனக்கு மருத்துவ துறை சம்பந்தமாக மிகுந்த செல்வாக்கு உண்டு என்றால் நான்

பணியாற்றி வரும் மருத்துவமனையில் இருக்கும் தலைமை மருத்துவரை எனக்கு தெரியும். நான் பணியாற்றி வரும் மருத்துவமனைக்கு நோயாளிகளை பரிந்துரை செய்யும் மருத்துவர்களையும் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல, எங்களின் மருத்துவமனைக்கு அரசு மருத்துவமனையில் இருந்து பரிந்துரை செய்யமாட்டார்கள். அ.சா.1 ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டபோது மருத்துவர் அங்கே சிகிச்சையளிக்க வந்தபோது நான் அ.சா.1 உடன் தான் அருகில் இருந்தேன் என்றால் சரிதான். அ.சா.1 தன்னை எத்தனை பேர் தாக்கியதாக மருத்துவரிடம் கூறினார் என்றால் 2 நபர்கள் தாக்கியதாக கூறினார். அந்த 2 நபர்கள் யார் என்று மருத்துவரிடம் தெரிவித்தாரா என்றால் 2 தெரிந்த நபர்கள் அடித்ததாக கூறியிருக்கலாம். போலீசார் விசாரணையிலும் என்னுடைய கணவர் அ.சா.1 இதைத்தான் கூறியிருப்பார் என்றால் சரிதான். போலீசார் புகார் வாக்குமூலம் வாங்கும்போது நான் அ.சா.1 உடன் இருந்தேன் என்றால் சரிதான். அந்த புகார்வாக்குமூலத்தை எனக்கு தனியாக படித்து காட்டவில்லை என்றால் என் முன்னிலையில் வைத்து அ.சா.1 யிடம் படித்து காண்பித்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. நான் எந்த மருத்துவமனையிலும் சிகிச்சை எடுக்கவில்லை என்றால் ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனையில் எனக்கு ஊசி போட்டார்கள், மருத்துவச் சீட்டு எதுவும் வழங்கவில்லை. பொதுவாக மருத்துவத்துறையில் ஒரு சிறிய காய்ச்சல் ஏற்பட்டால் கூடி OP சீட்டு பதிவு செய்வார்கள் என்றால் சரிதான், மருத்துவமனையில் பதிவு செய்திருப்பார்கள், ஆனால் என்னிடம் எதுவும் வழங்கவில்லை. எனக்கு ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனையில் ஊசி போட்ட விபரத்தை நான் போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் என்னையும் எதிரி அடித்தார் என்ற விபரத்தை போலீசாரிடம் கூறினேன், ஆனால் நான் சிகிச்சை பெற்ற விபரத்தை போலீசாரிடம் கூறவில்லை. எனக்கு உண்மையிலேயே காயம் ஏற்பட்டு உண்மையிலேயே சிகிச்சை பெற்றால் போலீசார் விசாரணையில் கூறியிருப்பேன் என்றாலும் எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை, எந்த சிகிச்சையும் பெறவில்லை என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அ.சா.1, முத்துமுருகன், ஆறுமுகநயினார் ஆகியோர்கள் சேர்ந்து எதிரியின் கணவரை அரிவாளால் வெட்டி கொடுங்காயம் ஏற்படுத்திவிட்டு அந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக அ.சா.1 அளித்த பொய் புகாரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளபடி எனக்கும் அ.சா.1 க்கும் காயம் ஏற்படவில்லை என்றாலும் எதிரி வழக்கு சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** : இல்லை

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.04.07 17:37:40 +0530

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.04.07 17:37:45 +0530

Judicial Magistrate, Sathankulam.